[1996 பிப்ரவரி 28

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 143, திரு.கு.சீனிவாசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

143—

துயர் தணிப்பு பயிற்சி முகாம்

108490—திரு. கு. சீனிவாசன் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசிடம், இயற்கைச் சீற்ற துயர் தணிப்பு பயிற்சி முகாம் நடத்தும் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு அரசு இயற்கைச் சீற்ற துயர் தணிபபதற்கு அவர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்காக பல முகாம்களை நடத்தி ஆவன செய்து கொண்டு வருகின்றது.

முற்பகல் 10.25

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இயற்கைச் சீற்ற துயர் தணிப்பு பயிற்சி முகாம் நடத்தப்படுவதற்கான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். இயற்கைச் சீற்ற துயர் துடைப்பு பயிற்சி முகாம்கள் தமிழ்நாட்டில் எங்கெங்கு நடத்தப்படுகிறது? எத்தகைய நபர்களுக்கு அது தரப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயல்,வெள்ளம், நிலநடுக்கம், நிலச்சரிவு, தீ போன்றவைகளுக்கெல்லாம் முன்னெச்சரிக்கையாக அதை எப்படியெல்லாம் சமாளிக்கவேண்டும், என்னவெல்லாம் செய்யவேண்டும் என்பதற்காக, அண்ணா இன்ஸ்ட்டிட்யூட் ஆப் மேனெஜ்மென்ட் என்ற இடத்தில் நடத்தப்படுகிறது. இன்றைக்கு எல்லோருக்கும் தொடர்பாக இருக்கிற வருவாய்த் துறை அதிகாரிகள் மற்றுமுள்ள அதிகாரிகளுக்கெல்லாம் அந்தப் பயிற்சி கொடுத்து அந்தப் பயிற்சி மூலமாக எப்படி விரைவிலே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதையும் என்னென்ன பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்பது பற்றியும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

1996 பிப்ரவரி 28]

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே துயர் துடைப்பு பயிற்சி முகாம்கள் வருவாய்த் துறையைச் சேர்ந்த மாவட்ட அளவிலான அதிகாரிகளுக்கும் வட்ட அளவிலான அதிகாரிகளுக்கும் வழங்கப்படுகிறது என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கூறினார்கள். இன்றைக்கு சில நேரங்களில் இயற்கைச் சீற்றங்களினால், புயல், வெள்ளத்தால் பாதிக்கப்படுகிற நேரங்களில் மாவட்ட அளவில் அதிகாரிகள் வருவதற்குள்ளாக சில கிராமங்கள் தண்ணீரால் சூழப்பட்டு அந்தக் கிராமங்களிலிருந்து வெளியேற முடியாத அளவிற்குக் கூட ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. ஹெலிகாப்டர் வந்து உணவுப் பொட்டலங்கள் போடுகிற அளவுக்கு சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. அப்படிப்பட்ட நேர்வுகளில் அவர்களுக்கு உடனடியாக உதவுகிற வகையில் செஞ்சிலுவைச் சங்கம் போன்ற தன்னார்வ நிறுவனங்களில் உள்ளவர்கள் அந்தப் பயிற்சி முகாம்களில் பயிற்சி பெற முன்வருவார்களேயானால் அவர்களுக்கு இந்தப் பயிற்சி வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. மற்றவர்களுக்கும் அந்தப் பயிற்சி பெற வேண்டுமென்றால் செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புகள் அதிலே பயிற்சி பெற வேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டால் அரசு அதைக் கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போன்று சில நேரங்களிலே விரைவிலே அவர்களுக்கெல்லாம் உதவி இல்லையென்று சொன்னார்கள். அவர்களுக்கு உதவுவதற்குத்தான் இந்த அரசு வந்த பிறகு 'ஹாம் ரேடியோ' இன்றைக்கு எல்லா இடங்களிலும் கடற்கரை ஓரத்திலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் 'வெரி ஹை ப்ரீக்வன்ஸி' என்ற ஒரு கருவியை அவசரக் காலத்தில் மற்றவர்களுடன் உடனடியாக தொடர்பு கொள்வதற்காக இந்த அரசு வந்தவுடன் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றத்தினுடைய துயரைத் தணிப்பதற்காக பயிற்சி அளிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இயற்கைச் சீற்றத்தைத் தடுப்பதற்கு பதிலாக வந்த சீற்றத்தை, துயரை தணிப்பதற்காக அதிகாரிகள் உடனடியாக கவனிக்க மறுக்கிறார்கள். குறிப்பாக ஒரு வீடு

இடிந்து விட்டால், முழு வீடு இடிந்தால் 500 ரூபாய், பாதியாக இடிந்தால் 250 ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள். அந்தப் பணம் ஒரு ஓலை வாங்குவதற்கோ அல்லது கயிறு வாங்குதற்கோ போதவில்லை. ஆகவே, தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பயிற்சி பற்றிய கேள்வி. பயிற்சி பற்றி ஏதாவது இருந்தால் கேட்கலாம் (குறுக்கீடு) இல்லையென்றால் தனிக் கேள்வியாகப் போடுங்கள். திரு. எஸ்.எஸ்.ராமசுப்பு.

முற்பகல் 10-30

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றத்தினால் மக்களுக்கு ஏதாவது வெள்ளச் சேதம், அதுபோல் இடி, மின்னல் தாக்குதலினால் மக்கள் உயிர் இழக்கிறார்கள். இப்போது ஆலங்குளத்தில்கூட ஒருவர் 4 நாட்களுக்கு முன்னால் இடி மின்னலினால் தாக்கப்பட்டு இறந்தார். அதுபோல் கன்னியாகுமரி மாவட்டத்தில் 9 பேர் இதனால் இறந்திருக்கின்றார்கள். இதுபோன்ற சீற்றங்கள் ஏற்படாமல் முன்கூட்டியே இதை அறிவதற்கு ஆய்வு அலுவலகங்கள் அமைக்கப்பட்டிருக்கிறதா ? அந்த ஆய்வு அலுவலகங்கள்—இடி மின்னல் இயற்கைச் சீற்றம் தான்—அந்த ஆய்வு அலுவலகங்களில் இருக்கின்றவர்களுக்கு நல்லமுறையிலே பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றத்தை முன்கூட்டியே அறிவது சிலவற்றை அறிய முடியலாம், சிலவற்றை அறிவது கஷ்டம். நிலச்சரிவு என்பது சங்கடமாக இருக்கிறது. தீ விபத்து என்பது எதிர்பாராமல் வந்துவிடுகிறது. அது முடியாது. புயல் என்பது பற்றி மட்டுமே ஆல் இந்தியா ரேடியோ மூலமாக அறிவிக்கப்படுகிறது. அதைக் கண்டுபிடிப்பதற்கான கருவிகள் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலேயும் இருக்கிறது, கண்டுபிடிக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 147, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.